DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

# DABARIM

## GOD'S PROMISE FOR THIS MONTH

*"BEHOLD, I WILL DO A NEW THING; NOW IT SHALL SPRING FORTH; SHALL YE NOT KNOW IT? I WILL EVEN MAKE A WAY IN THE WILDERNESS, AND RIVERS IN THE DESERT."*

*ISAIAH 43:19.*

## MESSAGE FOR THE MONTH

*Dn.S.Augustin M.A, B.D.*

Beloved in Christ,

Loving greetings in the precious name of our Lord and Savior Jesus Christ. This month God's promise for us from the Prophetical book of Isaiah 43:19.

Isaiah is proclaiming the wonder that God is always creating new possibilities, taking the old and reshaping it for a new day, taking your troubles and mine and making of them new chances for hope and health and beauty and goodness. Isaiah is one of the Old Testament prophets, speaking several hundred years before Jesus was born as a man. He prophesied many things including that God was going to send Israel into captivity in Babylonia because they had fallen away from honoring God. He prophesied the Messiah coming, and so many other things. And here he is saying to Israel, something new is coming!

At Christmas and Easter time we celebrate because we remember that God did something extraordinary. We do not need to wait for special occasions to celebrate. God is ALWAYS doing something. Ask God for sweeping positive changes in our life, family and local church this season. Sometimes we feel like we have nothing to give, nothing to offer, nothing of value. God can still do amazing things even when we have nothing. This sermon is about something. Even when we have nothing, God can still do something. God can work in us and with us and through us. God is always doing something. God is always doing something, even in the most difficult circumstances. Let's look at some examples:

In the Old Testament there is a story of a man called Jacob (Genesis 27 to 49). Jacob had 12 sons; he was particularly fond of one son - Joseph. The other sons were jealous so they sold Joseph to some slave-traders and told their father he was dead. Jacob was heart-broken. Joseph was not dead; he was working as a slave in Egypt. Then he ended up in jail. Despite his circumstances, he never lost his faith in God. Then, with God's help, Joseph was able to interpret a dream for the Pharaoh, the King of Egypt. Pharaoh made Joseph the second most powerful man in the whole kingdom. Even while Joseph was in prison, God was doing something. Meanwhile, poor Jacob was not only heartbroken, he was also hungry. There was a terrible famine in the land. In desperation, he sent his remaining sons to Egypt to buy food. Eventually, he not only found the food he needed to feed his family, he was also reunited with his long lost son. Imagine his joy! Even during a time of heartbreak, God was still doing something.

When the children of Israel were escaping from slavery in Egypt, they were trapped between the armies of Pharaoh and the Red Sea. There was no way out! Then God parted the waters of the sea and they were able to cross safely! Even in a situation with no escape, God was still able to do something!

The book of Esther tells the story of a Jewish girl who became queen of Persia. The King had allowed an edict to pass that all Jews would be put to death! The entire race was facing extermination and annihilation. Esther was able to persuade the King to let her people live. Even in the face of extinction, God was still doing something!

The Lord has promised to do a new thing. The new thing God is about to do in your life shall not be delayed. He will make rivers in your desert. The Lord is starting a new thing in your life, family, business, and ministry. Are you prepared for it?

May God bless you all.

# DIOCESE OF TIRUNELVELI
# BETHESDA C.S.I. TAMIL CHURCH
## PUNE

## STORY FOR THE MONTH
## Eric Liddell (1902-1945) Missionary to China

*என்னை கனப்படுத்துகிறவனை நானும் கனப்படுத்துவேன். 1 சாமு 2:30*

### Flying Scot Refuses To Run On Sunday






Most of us only think about Eric Liddell as 'the man who wouldn't run on Sunday', about whom about the Oscar winning movie 'Chariots of Fire' was made. He was known as the 'Flying Scotsman' and was the first of his country to win Gold during the 1924 Paris Olympics. Committed Christian Eric Liddell refused to race on Sunday and was forced to withdraw from the 100 meters, his best event. Instead, Liddell raced in the 400 meters and little was expected of him. As Liddell went to the starting blocks for the race, an American slipped a piece of paper in his hand with a quotation from 1 Samuel 2:30, **"Those who honour me I will honour."** Liddell ran with that piece of paper in his hand and not only won the race but broke the existing world record with a time of 47.6 seconds.

Liddell achieved a greater prize than Olympic Gold later on in his life. After the Olympics, Liddell returned to China to work as a missionary. His family, originally from Scotland, worked in China during the time of the Boxer Rebellion. Liddell worked as a teacher at a school for Chinese boys at which he taught chemistry and organized sports. He married in 1934 and in 1936 China prepared for war as Communist and Nationalist tensions increased. Liddell was asked by the London Missionary Society to give up his work in Tientsin, and work as a village evangelist in Siao Chang. This was a dangerous area. Liddell could not take his wife and two daughters with him and he was forced to leave them behind when he went to work there. He was able to visit on occasion, but it was a long journey. Visits were not frequent.

### EVANGELIST

The villages Liddell worked in suffered many hardships as a result of the warring between Communists and Nationalists. On one day, the Communists would pillage and destroy a village and then leave. Later, on another day, the Nationalists would come and do the same thing. His job in the area was evangelism and to encourage the Christians already there. The work was dangerous. Travelling in the countryside with Communist and Nationalist forces equally hostile to missionary work put Liddell in harm's way on a regular basis.

The Japanese invaded China and in 1940 Liddell told his wife to take their children to Canada where she could live with her parents. He stayed behind in Tientsin to continue his work. Liddell was sent by the Japanese to an Internment Camp where 1800 other internees were confined. He was not dissuaded by his circumstances. He worked tirelessly in the camp, doing just about anything that needed to be done, whether it was bible study, teaching children who were trying to keep up their studies, or organizing sports. In a prisoner exchange bargain, his freedom was arranged by Winston Churchill, but he gave it up and let a pregnant woman leave instead.

### I HAVE FINISHED THE RACE

In 1944, Liddell was not well. The doctors did not have the resources to diagnose the real nature of the problem. On February 21, 1945, he began coughing uncontrollably, and as friends came to his aid, he lay back and uttered the words ***"It is surrender".*** An autopsy later revealed that Liddell had a large tumors on the left side of his brain. He died never having seen his third child, Maureen Liddell. This man was truly committed to the cause of Christ. He had the opportunity to leave China but he chose to stay. He poured his life into the work of reaching the lost in China. **He worked for a prize far greater than gold, even Olympic gold.**




**Pray for Our Church Construction**

www.csitamilchurchpune.org
contactus@csitamilchurchpune.org

# DIOCESE OF TIRUNELVELI
# BETHESDA C.S.I. TAMIL CHURCH
## PUNE



## BIRTH OF A SONG
## சார்லட் எலியாட் - Charlotte Elliot 1789-1871

**நான் பாவிதான் ஆனாலும் நீர்**
**மாசற்ற இரத்தம் சிந்தினீர்**

இந்தப்பாடலை அறியாத கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. இந்தப் பாடல், ஆத்தும இரட்சிப்பின் பாடல் என்று அழைக்கப்படுகிறது. மிகப் பெரிய தேவ ஊழியரான,பில்லி கிரகாம் அவர்கள், தன்னுடைய கூட்டங்களின் முடிவில், ஆத்துமாக்களை இரட்சிப்புக்கென்று அழைக்கும் போது இந்தப் பாடலை பாடி அழைப்பது வழக்கம்.இந்தப் பாடலை எழுதியவர் சார்லட் எலியாட்(*Charlotte Elliot*) என்னும் அம்மையார் ஆவார். அவர் தனது 30 வயது வரை மிகவும், சந்தோஷமாய், எதைக் குறித்தும் கவலையில்லாதவராக, உற்சாகமானவராய், பாடிப் பறக்கும் பறவையைப் போல வாழ்ந்து வந்தார். அவர் 30 வயதை தாண்டிய போது, அவருக்கு ஒரு வியாதி வந்தது. அது அவரை படுக்கையை விட்டு எழுந்தரிக்க முடியாதபடி, அந்தப் பறவையின் காலை ஒடித்துப் போட்டதுப் போல படுக்கை கிடையாக்கிப் போட்டது.

அந்த அம்மையார் மனம் ஒடிந்துப் போனார்கள். தேவன் மேலும் உலகத்தில் உள்ள யாவர் மேலும் அவர்களுக்கு கோபம் வந்தது. சுயபரிதாபம் அவர்களை ஆட்கொண்டது. அப்பொழுது அவருடைய தகப்பனார், தங்கள் குடும்ப உறவினரும் கர்த்தருடைய ஊழியரும் பாடகருமான டாக்டர், சீசர் மலான் (*Dr. Caesar Malan*)என்னும் ஊழியரை தங்களது வீட்டிற்கு அழைத்தார். அவர் வந்துப் பேசினால் மகளுடைய இருதயம் மாறும் என்று நினைத்தார். அதுப்போல, அந்த டாக்டரும் வந்து சார்லட்டிடம் பேசிய போது, அவர்கள் தன் இருதயத்திலுள்ள வெறுப்பை எடுத்துக் கொட்டினார்கள். தேவனைப் பற்றிக் குறை கூறினார்கள். அதைக் கேட்ட அந்த டாக்டர், 'நீங்கள் மிகவும் களைத்து இருக்கிறீர்கள், வெறுப்பையும், கோபத்தையும் உள்ளடக்கி, சோர்ந்துப் போயிருக்கிறீர்கள்' என்றுச் சொன்னார். அப்போது, சார்லட், 'நான் சந்தோஷத்தை பெற்றுக் கொள்வதற்கு என்னச் செய்ய வேண்டும் என்றுக் கேட்டார்கள். அதற்கு டாக்டர், 'நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவேண்டும்'என்றார். அப்போது அவர்கள், 'நான் என்வாழ்வில் சில காரியங்கள் சரிசெய்ய வேண்டி உள்ளது. அவற்றை சரிசெய்தப் பிறகு நான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறேன்" என்றுக் கூறினார்கள். அதற்கு டாக்டர், 'நீங்கள் இருக்கிற வண்ணமாகவே கிறிஸ்துவிடம் வாருங்கள், அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். மட்டுமல்ல,உங்கள் வெறுப்பு, கோபத்திற்கு பதிலாக, சந்தோஷத்தையும் சமாதானத்தையம் தருவார்' என்றுக் கூறினார்.

அப்போதே அந்த அம்மையார், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அந்த நாளில்தானே இரட்சிக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து அந்த நாளை தனது ஆவிக்குரிய பிறந்தநாள் என்று ஒவ்வொரு வருடமும் கொண்டாடினர்கள். பதினான்கு வருடங்கள் கழித்து, அவருடைய சகோதரன் ஒரு போதகராக இருந்தவர், அவர் ஏழையான ஊழியர்களின் பிள்ளைகளுக்கு, ஒரு பள்ளியை ஆரம்பிக்க விழைந்தார். ஆனால், அவருக்கு போதிய பண உதவி இல்லாததால், என்ன செய்வது என்று சார்லட்டிடம் கேட்டபோது,அவர்கள் ஒரு பாடலை எழுதி அதை வைத்து, நிதியை திரட்டலாம் என்றுக் கூறினார்கள். அப்போது அந்த சீசர் மலான் என்ற டாக்டர் சொன்ன 'இருக்கிற வண்ணமாகவே கிறிஸ்துவிடம் வாருங்கள்' என்றுச் சொன்ன வார்த்தைகளை, ஞாபகத்தில் வைத்து, இந்தப் பாடலை எழுதி, அதன் மூலம் பணத்தை திரட்டி, அந்தப் பள்ளியைக் கட்டினார்கள்.

சார்லட் தன் வியாதியிலிருந்து கடைசி வரை சுகமடையவில்லை என்றாலும், கடைசி வரை வீட்டிலேயே சிறைப்பட்டு இருந்தாலும் அவர்களுடைய இருதயம் தன் சிருஷ்டிகராகிய கர்த்தரை நித்தமும் துதித்து, அவர்கள், தன் தேவனிடத்தில் நேசத்தை வைத்திருந்தபடியால், 150 பாடல்களை இயற்றினார்கள். அவை ஆங்கில கிறிஸ்தவ வரலாற்றில், ஒரு எழுப்புதலை உருவாக்கிற்று என்பது உண்மை. தங்கள் பெலவீனத்திலும் கர்த்தருக்கென்று பாடல்களை இயற்றி பாடிய அந்தக் கவிக்குயில், தனது 82ஆவது வயதில், நித்தியமான சுகத்தோடு, பெலவீனங்கள் மாறி தான் நேசித்த தேவனோடு என்றென்றும் வாழும்படி பறந்துச் சென்றது. ஆனால் அவர் இயற்றிய பாடல்கள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு இன்றளவும் பாடப்பட்டு வருகிறது. அல்லேலூயா!



If a believer footballer can pray for each other on the field, we can do the same.

**5 Fingers of Prayer**



## DIOCESE OF TIRUNELVELI
# BETHESDA C.S.I. TAMIL CHURCH
## PUNE

## ARTICLES FOR THE MONTH

### எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்

“என்னுடைய தாத்தா தச்சுவேலை செய்யும் தொழிலாளி. சீனாவிலுள்ள அனாதைக் குழந்தைகளின் இல்லத்திற்கு அமெரிக்காவிலுள்ள ஒரு சபையிலிருந்து குழந்தைகளுக்குத் தேவையான துணிமணிகள், போர்வைகள் இவைகளை சேகரித்து அனுப்பினார்கள். அதை பத்திரமாக பெட்டிகளில் அடைத்து அனுப்புவதற்காக என் தாத்தா பலகைப் பெட்டிகளைத் தயார் செய்தார். அன்று வேலை முடித்து வீடு திரும்பும்போதுதான் தன் ஷர்ட் பையில் வைத்திருந்த கண்ணாடியைக் காணோம் என்பதைத் தெரிந்து கொண்டார் அதை சமீபத்தில்தான் வாங்கியிருந்தார். வேலை செய்த இடத்திற்கு வந்துத் தேடிப்பார்த்தார். கிடைக்கவில்லை. பலகைப் பெட்டிகளைத் துணிமணிகளை அடைத்து ஆணி அடிக்கும்போது பையிலிருந்த கண்ணாடி நழுவி அந்த பெட்டியினுள் விழுந்திருக்கவேண்டுமென்று ஊகித்தார். ஆனால் பெட்டி கள் அனைத்தும் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டாயிற்று.

தாத்தாவுக்கு மிகுந்த துக்கம். இன்னொரு கண்ணாடி வாங்க வேண்டுமானால் அவருடைய தரத்துக்கும் மிஞ்சிய ஒரு செலவுசெய்ய வேண்டும். மிகுந்த துக்கத்தோடும் விரக்தியோடும் வீடு திரும்பினார். “ஆண்டவரே, மிகுந்த உண்மையோடு என்னுடைய நேரத்தையும் பணத்தையும் செலவழித்து நான் உம்முடைய வேலையைச் செய்தேன். ஆனால் எனக்கு சம்பவித்ததைப் பாரும்” என்று புலம்பினார்.

சிலமாதங்கள் கழித்து சீனாவிலிருந்து அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் மிஷனரி அமைப்பின் இயக்குனர் அமெரிக்காவிற்கு வந்திருந்தார். சீனாவிற்கு உதவிய சபைகள் அனைத்துக்குச் சென்று, கொடுத்த கரங்களுக்கு நன்றி சொல்லவிரும்பினார். சிக்காகோவில், என் தாத்தா செல்லும் சபையில், பேசுவதற்காக ஒரு ஞாயிற்று கிழமை அந்த இயக்குனர் வந்திருந்தார்.

அனாதைக் குழந்தைகள் மீது அக்கரை உள்ளவர்களாக அவர்களைத் தாங்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். “எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் அனுப்பியிருந்த கண்ணாடிக்காக நான் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகுந்த பத்திரமாக போர்வையின் மடிப்பிற்குள் வைத்து அனுப்பியிருந்தீர்கள். கம்யூனிஸ்ட் கட்சியினர் திடீரென்று எங்கள் அனாதை இல்லத்திற்கு நுழைந்து அங்கிருந்த அனைத்தும் பொருட்களையும் அடித்து உடைத்து நாசம் செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். அதில் நான் மேஜையில் வைத்திருந்த என்னுடைய கண்ணாடியும் உடைந்து தூள்தூளாயிற்று. என்னால் சரிவர பார்க்க முடியாத நிலையில் நான் தடுமாறிப்போனேன். வேறு ஒரு கண்ணாடி வாங்குவதற்கான வழிவகையும் இல்லாத நிலவரம். கண்ணாடி இல்லாமல் தலைவலியில் மிகவும் சிரமப்பட்டேன். என் உடன் பணியாற்றுகிற எல்லா ஊழியக்காரர்களும் எனக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். அந்த சூழ்நிலையில் நீங்கள் அனுப்பி வைத்த நன்கொடைப் பெட்டிவந்தது. திறந்து பார்த்தபோது இந்தக் கண்ணாடி கிடைத்தது. எனக்கென்றே செய்து, அனுப்பி வைத்தபோல என் கண்களுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. அதைத்தான் இப்பொழுது நான் அணிந்திருக்கிறேன். மற்றுமொரு காரியத்தையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அனுப்பி வைத்திருந்த பொருட்களின் பட்டியலில் இந்தக் கண்ணாடி சொல்லப்படவில்லை. உண்மையிலேயே இது ஒரு விசேஷித்த நன்கொடை” என்று சொல்லிமுடித்தார்.

ஆலயத்தின் கடைசி வரிசையில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்த என்னுடைய தாத்தா கன்னங்களில் கண்ணீர் வடிய அமர்ந்திருந்தார். அவருடைய கண்ணாடி ஒரு பெரிய மிஷனரிக்குப் பயன்படுகிறது என்ற மகிழ்ச்சியில் இப்பொழுது, தனக்குக் கண்ணாடி இல்லை என்பதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை. என்னுடைய எஜமானாகிய தச்சன் (MASTER CARPENTER) என்னிடமிருந்ததை வாங்கி என்னிலும் அதிகத் தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதில் மகிழ்ச்சி” என்று திருப்தியடைந்தார்.

**“எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது”** (1 தெச.5:18) என்பதை அறிந்திருந்தாலும் நாம் அநேக வேளையில் தேவனைத் துதிப்பதற்குப் பதிலாக அவரைக் குற்றப்படுத்திப் பேசுகிறோம். நாம் எப்படி இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்? நம்முடைய கார் ஸ்டார்ட் ஆகாவிட்டால் “ஆண்டவரே, உமக்கு நன்றி. நான் பிரயாணம் செய்து விபத்தில் சிக்குவதை நீர் தவிர்த்துவிட்டீரே” என்று அவரைத் துதிக்கக் கற்றுக்கொள்வோம். ஆண்டவரே, என் கண்ணாடியை தவறவிட்டதற்காய் நன்றி. அதை நிச்சயமாக மற்றொருவருக்கு பயனுள்ள வகையில்தான் நீர் செய்திருக்கிறீர். இதன்மூலம் எனக்கு ஒரு பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறீரே உமக்கு நன்றி.

என் தாத்தாவின் அனுபவத்தை நானும் ஒரு பாடமாக எடுத்துக்கொள்ள ஆண்டவர் எனக்கு உதவி செய்தார்.

தாத்தாவைக் குறித்து ஒரு பேரனின் சாட்சி (SOURCE-INTERNET).

“எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது” **(1 தெச.5:18).**

## BIBLE QUIZ FOR THE MONTH

### Angels of the Bible Crossword

**Word list:**
angel, announce, beautiful, serve, invisible, God, heaven, protect, sing, worship




**Across**

3. Angels ____ us we should not do this to angels.
5. Angels continually do this for God.
7. Some people think that angels looks very ____.
9. This is one of the jobs of angels, they do this for the second coming.
10. The one who made the angels.

**Down**

1. Angels can be visible or ____.
2. This is the place where angels live.
4. Whenever someone becomes a child of God the angels do this and rejoice with God.
6. With God's help the angels ____ us.
8. This word means God's messenger.

*God, the Provider of Food (Isaiah 55:1) – 3rd Aug'14*
*Lover of Children (Matthew 18:10) – 10th Aug'14*
*Dedication to Service (Luke 10:37) – 17th Aug'14*
*Unifying Christ (Galatians 3:28) – 24th Aug'14*
*Impact of Many Contacts (1Corinthians 15:33) – 31st Aug'14*

www.csitamilchurchpune.org

contactus@csitamilchurchpune.org